# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் **15.07.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 7081/SCIC/2024**

Thiru Bakthiar Ullah Khan ..... மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர், ....... பொதுஅதிகார அமைப்பு
சென்னை பெருநகர காவல்,
கொளத்தூர் காவல் வட்டம்,
சென்னை 600 082

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 01.09.2023 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 03.10.2023 |
| 3. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 28.01.2024 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 29.05.2024 |
| 5. | அதன்பின்பு பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 09.10.2025 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 28.11.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / காவல்துணை ஆணையர், மாதவரம் என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 01.09.2023 தேதியிட்டு அனுப்பிய மனுவில் 29.12.2021 தேதியிட்ட தனது புகார் மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து 4 இனங்களில் தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. **தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது.** பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திரு ராஜ்பால், காவல் உதவி ஆணையர், காவல் துணை ஆணையர் அலுவலகம், கொளத்தூர் காவல் வட்டம், சென்னை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. பொதுத் தகவல் அலுவலர் சார்பில் இன்றைய விசாரணைக்கு ஆஜரான அலுவலர், மனுதாரரின் மனுவில் கோரிய தகவல்கள் 28.01.2024 மற்றும் 09.10.2025 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அதில் எதிர்தரப்பின் ஆஜராகவில்லையென்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும், மனுதாரரின் மனுகுறித்து, இறுதி அறிக்கையானது சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணையின்போது தெரிவித்தார்.

4. ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரரின் புகார் மனுவிற்கான தற்போதைய நிலை குறித்த தகவல்கள் பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்படவில்லையென்பது தெளிவாகிறது. **எனவே, பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் புகார் மனுவின் தற்போதைய நிலை குறித்த விவரங்களை 31.07.2026 தேதிக்குள் விரைவுத்தபால் மூலம் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அதுகுறித்த அறிக்கையினையும் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல்துறையின் ஆதாரத்தினையும் ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

5. பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து தனது கருத்துக்களை எடுத்துரைக்க மனுதாரருக்கு ஆணையத்தால் ஒரு வாய்ப்பளிக்கப்பட்டும், அவர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. **எனவே, இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7081/SCIC/2024</u>**

பெறுநர்
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையர்,
சென்னை பெருநகர காவல்,
கொளத்தூர் காவல் வட்டம்,
சென்னை 600 082

**மனுதாரர்**

Thiru H. Bakthiar Ullah Khan,
S/o Habibulla Khan,
Old No.10, Mirza Hyder Ali Khan Street,
Royapettah, Chennai 600 014

TK/PS